# ஆரோவில் தமிழ்ச் செய்திகள்

**23.11.2023, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆர்ஏ பதிப்பு எண்: 06**

---

**ஸ்ரீ அரவிந்தர் - மனித சக்கரம்** (Human cycle)
**11.வாழ்க்கையின் எஜமானனாகப் பகுத்தறிவு.**

மேலும், நடந்தவைகளை மீண்டும் பின்னோக்கி நினைத்துப் பார்ப்பதோ, அல்லது, பின்னால் நிகழ இருப்பவற்றை அறிவாற்றலுடன் முன்னோக்கிப்பார்ப்பதோ அல்லது பிற செயல்களையும் சக்திகளையும் ஒரு தெளிவான ஒருங்கிணைப்புச் சக்தியுடன் நோக்குவதோ இல்லை. வாழும் உயிரியின் உருவாக்கப்பட்ட பிற சக்திகள், உதாரணத்திற்கு மனிதனிலாயினும் விலங்கினிலாயினும் உள்ள இயலறிவுகள் மனிதனிடத்தில் இவை தரம் தாழ்ந்தவை ஏனெனில் இவை பகுத்தறிவின் கேள்விகளாலும் தேடலாலும் உலைவு செய்யப்பட்டுள்ளன - தங்களுள்ளே கடந்த கால அனுபவம் என்னும் தங்களுடைய சொந்த சக்தியையும், இயலறிவாகத் தேவைக்கேற்றபடி தன்னைத் திருத்திக்கொள்ளும் சக்தியையும் கொண்டுள்ளன; இவையாவும் சேமிப்பு அறிவாம். மேலும் சிலசமயங்களில் இவை இந்த சேமிப்பை மிக உறுதியாகப் பற்றியிருப்பதால் தலைமுறை தலைமுறையாக நிச்சயமான பரம்பரைச் சொத்தாக ஒப்படைக்கப்படுகிறது. ஆனால் இவையனைத்தும், அவை இயலறிவுத் தன்மையாக இருப்பதாலேயும், தன்னையே திரும்பி நோக்கி சிந்திக்காமலிருப்பதாலும், உண்மையிலேயே உயிர் வாழ்க்கையின் செயல்முறைகளை நடத்துவதற்கு பயனுள்ளவையாய் இருக்கின்றன, ஆனால் ஒன்றுகூட வரை மிகவும் அது பகுத்தறிவால் எடுத்துக்கொள்ளப்படாத - மனிதனின் கருத்தில் இருக்கும் அந்தக் வாழ்க்கையின் குறிப்பிட்ட நோக்கத்திற்கு, அதாவது இயற்கையில் ஆன்மாவிற்குரிய புதிய வகையிலான செயல் முறைகளுக்கும், ஒரு சுதந்தரமான அறிவார்ந்த ஒத்திசைவுக்கும். அறிவுடன் தன்னைத் தானே நோக்குவதற்கும், உணர்வு நிலையிலுள்ள சித்பொருள், சக்தியின் செயல்பாடுகளை ஆட்சி செய்வதற்கான அறிவுள்ள பரிசோதனைகள் செய்வதற்கும் பயன்படுவதில்லை.

பகுத்தறிவு அதற்கு மாறாக அறிவுக்காகவே இருக்கிறது. செயலால் தன் வசமிழக்காமல், தன்னைத் தானே தடுத்து நிறுத்திக்கொள்ள அதனால் முடியும். செயலிலிருந்து விலகி இருக்கமுடியும். நடைமுறையில் இருக்கும் சக்திகளின் செயற்பாடுகளையும் திறமைகளையும் அறிவாற்றலுடன் ஆராய, ஏற்றுக்கொள்ள, மறுக்க, மட்டுப்படுத்த, மாற்றியமைக்க, செம்மைப்படுத்த, ஒன்றுசேர்க்க மற்றும் மீண்டும் இணைக்க அதனால் முடியும், ஓரிடத்தில் அடக்கியொடுக்கவும், மற்றோரிடத்தில் சலுகைகாட்ட வும் முடியும், அது ஓர் அறிவாற்றலுள்ள புரியக் கூடிய மனோ உறுதிகூடிய மற்றும் ஒழுங்கமைப்புள்ள முழுமைக்காகப் பாடுபடமுடியும். பகுத்தறிவு விஞ்ஞானமே, அது உணர்வுள்ள கலை, அதுவே புதியவைகளின் கண்டுபிடிப்பு. அதுதான் கூர்ந்து நோக்குதல், மேலும் அது நடப்புகளின் உண்மையை நன்கு புரிந்துகொண்டு சீராக அமைக்க முடியும்; அது ஊகித்தறியவும், மேலும் உள்ளாற்றிலின் உண்மையைச் சிக்கலிலிருந்து விடுவித்து, நடக்க இருப்பதைக் கூறவும் முடியும், அது கருத்தும் அதன் நிறைவேற்றமும், அது இலட்சியமும் அதைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதுமாகும்; அது உடனடித்தோற்றத்தை உற்றுநோக்கி அதன் பின்னால் ஒளிந்திருக்கும் உண்மைகளைத் திரைவிலக்கிக் காட்ட முடியும். அது ஒரு சேவகன், இருப்பினும் அனைத்துப் பயன்பாடுகளின் எசமானனும் ஆகும். மேலும் அது அனைத்துப் பயன்பாடுகளையும் ஒதுக்கிவைத்து நடுநிலையிலி ருந்து உண்மையை அதன் பொருட்டே நாடிட முடியும், மேலும் அதைக் கண்டுபிடிப்பதன் மூலம் ஒரு புதிய சாத்தியமான பயன்பாடுகளின் முழு உலகத்தையே காண்பிக்க முடியும். ஆகையால் அது ஒரு தலையாய சக்தி, அதனால் மனிதன் தன்னைத்தானே அடைந்தவனாகிறான், தன்னுடைய சொந்த சக்திகளின் மாணவனும் ஆசானும் ஆகிறான், அது தெய்வத் தன்மை, அவனிடத்துள்ள பிற தெய்வத் தன்மைகள் அவற்றின் ஏற்றத்திற்கு உதவ அதையே சார்ந்திருக்கின்றன; அது புராண நீதிக் கதையில் வரும் புரோமித்தியஸ் (கிரேக்கப் புராணமரபில் தேவர்தலைவனை எதிர்த்துப்போராடி மனித உலகிற்கு அக்னியைக் கொண்டுவந்தவன்), உதவியாளன், ஆசான், உயர்த்தும் நண்பன், மனித இனத்தை நாகரிகப்படுத்துபவன்.

அண்மைக் காலத்தில் மனித மனத்தில் எப்படியோ அறிவாற்றலின் இந்தத் தனிமுதன்மைக்கு எதிரான ஒரு புரட்சி, கூறப்போனால், பகுத்தறி வுக்கே அதனுடனும் மற்றும் அதனுடைய சொந்த வரையறைகளுடனும் ஓர் அதிருப்தி நிலவுகிறது. மேலும் நம்முடைய இயற்கையின் பிற சக்திகளுக்கு அதிக சுதந்தரமும் மேலும் அதிக முக்கியத்துவமும் கொடுக்க வேண்டும் என்ற விருப்பம் நிலவுகிறது. மனிதனிடத்தில் உள்ள பகுத்தறிவின் தனிமுதன்மை எப்போதும் உண்மையிலேயே குறைபாடுடையதாக இருந்து வந்துள்ளது, உண்மையாகவே ஒரு துயருற்ற, போராடுகின்ற, தடைசெய்யப்பட்ட மற்றும் அடுத்தடுத்து தோல்வியடையும் ஆட்சியாகும், ஆனால் இன்னமும் அது மனித இனத்தின் மிகச்சிறந்த அறிவாளிகளால், ஆணை உரிமையாக மற்றும் சட்டம் அளிப்பவனாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பரவலாக ஒப்புக்கொள்ளப்பட்ட அதன் ஒரே எதிரி மத நம்பிக்கையே. மதம் ஒன்றுமட்டுமே. பகுத்தறிவு அதன் முன்பாக மவுனமாக இருத்தல் வேண்டும். அல்லது குறைந்த பட்சம் அது (பகுத்தறிவு) தானே சென்று எட்டமுடியாத துறைகள் உள்ளன, மேலும் அங்கே நம்பிக்கை மட்டுமே கேட்கப்படவேண்டும் என்ற அதனுடைய உரிமைக்கோரிக்கையில் ஆற்றலு டன் வெற்றிகண்டது; ஆனால் சிறிது காலத்திற்கு, மதம் கூடத் தான் கொண்டாடிய அதனுடைய முழுமையான உரிமைத்தகுதியைத் துறக்கவேண்டிவந்தது, அல்லது குறைத்துக்கொள்ள வேண்டியிருந்தது; மேலும் அறிவாற்றலின் தனி முதன்மைக்கு பணியவும் நேர்ந்தது. அடிக்கடி வாழ்க்கை, கற்பனை, உணர்ச்சி, ஒழுக்கவியல் மற்றும் அழகுணர்ச்சித் தேவைகள் தமக்காவே தாமிருப்பதாகவும் மேலும் தங்கள் போக்குகளைப் பின்பற்ற உரிமையும் கோரின; அடிக்கடி அவை தம் உரிமையை நடை முறையில் வலிந்து செயற்படுத்தின, ஆனால் அவை இன்னும் பொதுவாக மதக்குழுவின் விசாரணைக்குக் கீழ்ப்படிந்து செயலாற்ற வேண்டியிருந்தன. ஓரளவு பகுத்தறிவின் கட்டுப்பாட்டிற்கும் அடங்கிச் செய லாற்ற வேண்டியிருந்தன, மேலும் பகுத்தறிவை ஒரு மத்தியஸ்தராக அல்லது நடுவராக நாடி ஆய்வுரை பெறவேண்டியிருந்தன. தற்போது, எப்படியும், மனித இனத்தின் சிந்திக்கும் மனம், தன்னைத்தானே கேள்வி கேட்டுக்கொள்ளும் தன்மையை அடைந்துள்ளது, மேலும் சிருஷ்டி, அறிவாற்றலின் சக்திகளால் முழுமையாகக் கைக்கொள்ளப்பட்டு முறைபடுத்தக்கூடாத கேட்கும் அளவுக்கு மிக விரிவான, ஆழ்ந்த மற்றும் மறைவியலான பொருளல்லவா? என்று தன்மையை அதிகமாக அடைந்துள்ளது. தெளிவாகத் தெரியாவிட்டாலும், பகுத்தறிவு கடந்த ஒரு தெய்வத் தன்மை உண்டு என்பது உணரப்படுகிறது.

சிலருக்கு இந்தக் தெய்வத் தன்மை வாழ்க்கையேயாகும். அல்லது வாழ்வில் இரகசியமாக உள்ள விருப்பாற்றல் ஆகும். இதுவே ஆட்சி செய்ய வேண்டும். மேலும் அறிவாற்றல் இதற்காக வேலை செய்யும்வரை மட்டுமே பயனுள்ளது. மேலும் பகுத்தறிவின் தற்போக்கான கட்டுப்பட்டால் வாழ்க்கை ஒடுக்கப்படக்கூடாது, குறைவுபடலாகாது மற்றும் இயந்திரமயமாக்கப்படக்கூடாது என்று அவர்கள் கோருகிறார்கள். வாழ்வு அதனுள் பெருஞ்சக்திகளைக் கொண்டது, அவற்றின் செயற்பாட்டிற்கு சுதந்தரமளிக்க வேண்டும் ஏனென்றால், அவை மட்டுமே வளர்ச்சியடைகின்றன மற்றும் படைக்கின்றன. அதற்கு மாறாகப் பகுத்தறிவு மிகவும் பகுப்பாய்வு செய்வதாக மிகவும் தற்போக்கானதாக, அதனுடைய வேறுபாட்டுப் பிரிவுகள் மற்றும் நிலைத்த பகுப்புகள் மற்றும் அவற்றின் அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட நிலைத்த விதிகள் இவற்றால் வாழ்க்கையைத் தவறாகத் திருத்தியமைக்கிறது என்று கருதப்படுகிறது. மேலும் அதனினும் ஆழ்ந்ததும், விரிவானதுமான அறிவு, நேர்ஞானம் அல்லது வேறு ஏதோ ஒரு சக்தியுள்ளது.

*(தொடரும்......)*

# லேண்ட்ஸ் ஃபார் ஆரோவில் யூனிஃபைட் (எல்எஃப்ஏயூ)

ஆரோவில் நகர ஆராய்ச்சி மையம், நிர்வாகப் பகுதி,
ஆரோவில், 605 101, தமிழ்நாடு, இந்தியா

**24 நவம்பர் 2023**

ஆரோவில்லின் அன்பார்ந்த நண்பர்களுக்கும் நலம் விரும்பிகளுக்கும்,

24 நவம்பர் 1924. தொண்ணூற்றொன்பது ஆண்டுகளுக்கு முன்பு, இந்தத் தேதியில், பூமியின் பரிணாம வளர்ச்சிக்கான தமது யோகத்தில் ஸ்ரீ அரவிந்தர் ஒரு முக்கியமான மைல்கல்லை எட்டினார், மேலும் தீவிரமான புதிய மற்றும் இதுவரை கண்டறியாத பாதைகளில் மேலும் முன்னேற்றங்களுக்காக ஒதுக்கம் போனார். அதுவே ஆசிரமத்தின் அதிகாரப்பூர்வ தொடக்கமாகவும் இருந்தது. பின்னர், நாற்பத்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, 1968-இல், ஆரோவில் தொடங்கப்பட்டது. அந்த முக்கியமான தொடக்கத்திலிருந்து ஐம்பத்தைந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்று, இரண்டு முன்முயற்சிகளும் – 1924-இல் ஆசிரமம் மற்றும் 1968-இல் ஆரோவில் – உறுதியாக நிறுவப்பட்டு வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றன.

பல சவால்கள் உள்ளன, ஆனால், ஒவ்வொரு முறையும் அவை அவற்றில் இருந்து வலுவாக வெளிவந்துள்ளன. சவால்கள் இன்னும் உள்ளன, ஆனால் கடந்த காலத்தைப் போலவே, நிகழ்கால மற்றும் எதிர்காலத் தடைகளும் கடக்கப்படும் என்ற முழுமையான உறுதிப்பாடு எங்களிடம் உள்ளது. இந்த முழுமையான உறுதியுணர்வு அடிப்படையானது சித்தாந்தத்தின் மகத்துவம் அல்லது குறிக்கோள்கள் மற்றும் இலட்சியங்களில் இல்லை - ஆனால் மிகவும் ஆழமான ஒன்றில் உள்ளது. சிலர் அதை பரம்பொருள் அல்லது தெய்வீகம் என்று அழைக்கலாம். மற்றவர்கள் அதை சக்தி (மெய்ப்பொருள்) அல்லது புதிய உள்ளுணர்வு என்று அழைக்கலாம். இன்னும் சிலர் அதை மனித ஆன்மாவின் அழியாத ஆர்வங்கள் என்று அழைக்கலாம். ஆனால் பெயர் எதுவாக இருந்தாலும், இந்த இரண்டு முன்முயற்சிகளின் எதிர்காலம் பற்றிய நமது முழுமையான உறுதிப்பாட்டின் வேர்கள் அதில்தான் உள்ளது.

*"ஸ்ரீ அரவிந்தரின் அகக்காட்சிக்கு உறுதியான வடிவம் கொடுக்கும் பணி ஸ்ரீ அன்னையிடம் ஒப்படைக்கப்பட்டது. ஒரு புதிய உலகம், ஒரு புதிய மனிதநேயம், ஒரு புதிய சமூகத்தை உருவாக்குதல், புதிய உள்ளுணர்வை வெளிப்படுத்துவதும், உருவகப்படுத்துவதும் அவர் மேற்கொண்ட பணியாகும். விஷயங்களின் இயல்பால், இது ஒரு கூட்டு இலட்சியமாகும், இது ஒரு கூட்டு முயற்சிக்கு அழைப்பு விடுக்கிறது, இதனால் அது ஒரு ஒருங்கிணைந்த மனித பரிபூரணத்தின் அடிப்படையில் மெய்க்கண்டுணரப்படலாம்.*

*ஸ்ரீ அன்னை நிறுவி அமைத்த ஆசிரமம் இந்த இலக்கை அடைவதற்கான முதல் படியாகும். ஆரோவில்லின் திட்டமானது மனிதகுலத்தின் கூட்டு வாழ்வில் ஆன்மாவிற்கும் உடலுக்கும், மெய்ப்பொருளுக்கும் இயற்கைக்கும், சொர்க்கத்திற்கும் பூமிக்கும் இடையே இணக்கத்தை நிலைநாட்டுவதற்கான இந்த முயற்சியின் அடித்தளத்தை விரிவுபடுத்தும் அடுத்த கட்டமாக, மேலும் வெளிப்புறமாக உள்ளது."*
*ஸ்ரீ அன்னை - 1969 (குறிப்பு. "தி மதர் ஆன் ஆரோவில்", பக்கம் 18)*

""மனிதகுலத்தின் கூட்டு வாழ்க்கையில் ஆன்மா மற்றும் உடல், மெய்ப்பொருள் மற்றும் இயற்கை, சொர்க்கம் மற்றும் பூமி ஆகியவற்றுக்கு இடையே நல்லிணக்கத்தை நிலைநாட்ட" ஆரோவில்லின் அற்புதமான இல்லத்தினை உயர்த்தத் தேவையான பொருள் அடுக்கை வழங்குவதன் மூலம் ஏக்கர்ஸ் ஃபார் ஆரோவில்" (ஏ4ஏ) கூட, "இந்த முயற்சியின் அடித்தளத்தை விரிவுபடுத்த முயல்கிறது". இந்த முயற்சியில் உங்களின் மதிப்புமிக்க ஒத்துழைப்புக்கு நன்றி.

ஆரோவில்லின் பிரகாசமான எதிர்காலத்தில் நம்பிக்கை கொண்டு,

ஆர்யதீப் மந்தாகினி

**காசோலை, வங்கிப் பரிமாற்றம் அல்லது ஆன்லைன் மூலம் வழங்கும் உங்கள் நன்கொடைகளில் "ஏக்கர்ஸ் ஃபார் ஆரோவில்" என்று தயவுசெய்து குறிப்பிடவும்:**

**நன்கொடை மற்றும் வரி விலக்கு தகவல்: https://land.auroville.org/new-banking-information/**
**செய்திகள், வீடியோக்கள் மற்றும் நிலத் தகவல்: www.land.auroville.org தொடர்பு கொள்ளவும்: lfau@auroville.org.in**

# ஏக்கர்ஸ் ஃபார் ஆரோவில் நிலத்திற்கான பிரச்சாரம்

**24-11-2023 - ஸ்ரீ அரவிந்தரின் பூரணயோகத்தில் ஒரு முக்கிய தினம்**



**1926 நவம்பர் 24 அன்று,** ஸ்ரீ அரவிந்தர் தமது தனிப்பட்ட மற்றும் சமூக பரிணாம வளர்ச்சியின் பூரண யோகத்தில் ஒரு பெரிய திவ்யமாற்றத்திற்கான படியின் வருகையை அறிவித்தார் - "உள் வழிகாட்டி, பிரபஞ்ச குரு" அவரைப் பின்பற்ற வழிநடத்தும் அவரது பாதையில் முக்கியத் தருணம். இது அடுத்த கட்டத்தைத் தொடங்கிய திருப்புமுனையாகும் – – மனிதகுலத்திற்கான முழுமையான மாற்றத்தினை நோக்கமாகக் கொண்டு, இந்த யோகத்தை அவரிடமிருந்து அவரது சீடர்களுக்கும் அதற்கு அப்பாலும் விரிவுபடுத்துவது மற்றும் ஸ்ரீ அன்னையின் ஆரோவில்லின் உருவாக்கம். அவர் இவ்வாறு எழுதினார்:

**"மனிதன் ஒரு இடைநிலை உயிரினம்;** அவன் இறுதியானவன் அல்ல. அது அவனிடமிருந்து தொடங்காதது போலவே, அது அவனுடன் முடிவதில்லை. அவன் அதன் நிதர்சமான உச்சம் அல்ல, அதன் மிக உயர்ந்த தோன்றல் அல்ல, பேரியற்கையின் கடைசியான தெளிவான முழுமை அல்ல. பேரியற்கை (சக்தி) மனிதனுக்குள் அவளுடைய மிக உயர்ந்த சாத்தியங்களை வெளிக்கொண்டு வரவில்லை; உள்ளுணர்வு மற்றும் ஜீவனின் உச்சநிலையை அவள் அவனில் எட்டவில்லை; அவனுக்கு முன்பாக முழுமையற்ற மனிதன், பூச்சி, விலங்கு இருந்ததைப் போலவே, அவனுக்குப் பிறகும் அதிமனிதன் இருப்பான்.

**"மனிதன் தானே அதிமனிதன் ஆகலாம், அவன் இப்போது இல்லாத அனைத்தும் ஆகலாம்;** ஆனால் அதற்கு அவன் தன்னையே மிஞ்ச வேண்டும். பரிணாம வளர்ச்சியின் அடுத்த படியை அவன் எடுக்க முடியும் என்பது அவனுடைய தற்போதைய அபூரண உள்ளுணர்வுடன் ஒட்டிக்கொள்வதன் மூலம் அல்ல. அவன் தனக்குள் இருக்கும் ஆன்மீகக் கடவுளைக் கண்டுபிடித்து விடுவிக்க வேண்டும், அவருடைய தெய்வீக சாத்தியங்களை உணர்ந்துகொள்ள வேண்டும், தானே மாபெரும் ஆற்றல் வாய்ந்தவனாக இருக்கவேண்டும், பூமிக்குரிய பேரியற்கையின் மர்மத்தைத் தொடங்கியதிலிருந்து அதைச் சிறைப்படுத்திய அசல் பிளாஸ்மமில் இருந்து வெளிவர போராடிக்கொண்டிருக்கும் தெய்வீகமான ஒருவர்.

***"ஸ்ரீ அரவிந்தரின் போதனைகளின் அடிப்படையில் மனித ஒற்றுமையின் முதல் வெளிப்பாடாக ஆரோவில் இருக்க விரும்புகிறது, அது அனைத்து நாட்டவர்களுக்கும் இருப்பிடமாகத் திகழும்." - ஸ்ரீ அன்னை***

**ஆரோவில்லிற்குத் தேவையான நிலங்களை ஒருங்கிணைக்க எங்களுக்கு உதவுங்கள்!**

காசோலை, வங்கிப் பரிமாற்றம் அல்லது ஆன்லைன் மூலம் அனுப்பும் **உங்கள் நன்கொடைகளில் "ACRES FOR AUROVILLE" என்று தயவுசெய்து குறிப்பிடவும்.**

நன்கொடை மற்றும் வரி விலக்கு தகவல்: https://land.auroville.org/new-banking-information/

செய்திகள், வீடியோக்கள் மற்றும் நிலத் தகவல்: www.land.auroville.org தொடர்பு கொள்ளவும்: lfau@auroville.org.in

**புகைப்படம்: அன்னையின் ஓவியம்: ஸ்ரீ அரவிந்தரின் கருத்துருவை அடிப்படையாகக் கொண்டது. "கான்ஷியஸ்னஸ் எமெர்ஜிங் ஃபிரம் தி இன்கான்சியன்ட்"**
**மேற்கோள்கள்: "எஸ்ஸே ஹியுமன் & டிவைன்" பகுதி 81 ("தி எமர்ஜென்ஸ் ஆஃப் தி சூப்பர்மேன்"), 1942**

**ஏக்கர்ஸ் ஃபார் ஆரோவில் என்பது ஆரோவில் இன்டர்நேஷனல் & லேண்ட்ஸ் ஃபார் ஆரோவில் யூனிஃபைடு கூட்டுப்பணியாகும்.**

## த க வ ல் க ள் ( I N F O R M A T I O N )

### <u>ஆஸ்பிரேஷன் புத்தூஸ் பிடிபிஎஸ்ஸில் குமரன், ஜோயல் & குழு ஒரு ஆண்டு நிறைவு</u>

<u>(PourTous PTPS Aspiration one full year with Kumaran, Joel & team)</u>

அன்பார்ந்த சமூகத்தவருக்கு, உங்கள் ஆதரவிற்கு நன்றி .
நாங்கள் இப்போது ஒரு முழு ஆண்டை முடிந்தவரை 'முழுக் கட்டுப்பாட்டில்' நிறைவு செய்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடனும் பெருமிதத்துடனும் தெரிவித்துக் கொள்கிறோம்.
நாங்கள் இருவர், நாங்கள் இருவர், எங்களது சக்தி வாய்ந்த பெண்கள் குழு மற்றும் ஒரு சில ஆண்களின் ஆதரவுடன் மட்டுமே எங்களது படகை உங்களுக்காக மிதக்க வைத்தோம்.

நாங்கள் எங்கள் இலட்சியங்களை நிறைய நிறைவேற்றியுள்ளோம், ஆனால் அவை எப்போதும் சுபலமானவை அல்ல*...

- நாங்கள் எப்போதும் வெளிப்படைத்தன்மை, சிக்கனம், நீண்டகால சிந்தனை, சமூகச் சேவை, உங்களுக்கான எங்கள் சேவையை கற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் செய்து வருகிறோம்.

நீடித்தத்தன்மையற்ற பொருட்களைத் தவிர (உள்ளூர் நிலையான பொருட்களுக்கு மானியம் வழங்கும் எம்ஆர்பி) தேவையான 15% (குளிரூட்டப்பட்ட பொருட்களுக்கு 20%) இலாபத்தை குறைத்துள்ளோம்.

- குறைந்த இலாபம் இருந்த போதிலும் நாங்கள் செய்த விரிவான புதுப்பிப்புகளுக்கு உண்மையில் நிதி கிடைத்தது.
- டிசம்பர் 22 அன்று (நாங்கள் தனியே பொறுப்பேற்ற பிறகு) ஒரு முழுமையான ஸ்டாக்கைப் பதிவைச் செய்துள்ளோம், இதன் மூலம் 575.000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது, இந்நிதியாண்டின் இறுதியில் (மார்ச்சு 23) இதை 150.000 ஆகக் குறைந்து, பின்னர் ஜூன் 23-இல் 75.000 ஆகவும், இப்போது 50.000 ஆகவும் உள்ளது, இவற்றுள் பொருட்கள் காணாமல் போனது, சேதமடைந்தது, காலாவதியானது, திருடப்பட்டது ஆகியவை அடங்கும். என்றாலும் தொழில் தரத்தின்படி இது ஏற்றுக்கொள்ளத் தக்கது.
- பல நிறுவனங்கள் (யூனிட்கள்), பள்ளிகள், சேவைகள், விருந்தினர் இல்லங்கள் முடிந்தவரை குறைந்த விலைகளில் பொருட்களைப் பெற்றுள்ளன - அடிப்படையில் உங்களுக்காக முடிந்தவரை மலிவாக வாங்க முயலுகிறோம்
- இங்கு பணிபுரியும் பெண்களுக்கு கணினிகள், பில்லிங், ஆர்டர் செய்தல், பொறுப்பேற்றல், பொறுப்பை எடுத்துக்கொள்ளுதல் போன்றவற்றில் பயிற்சி பெறுவதற்கு அனுமதியும் ஆதரவும் அளிக்கின்றோம்.
- ஆரோவில், ஆரோவில் தோட்டங்கள் & பண்ணைகள், ஆரோவில் மண்டலப் பகுதி, உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் இருந்து பல உற்பத்திப் பொருட்களைச் சேர்த்துள்ளோம்.
- ஆரோவில், ஆரோவில் மண்டலப் பகுதி, உள்ளூர், இயற்கைமுறையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் பிரிவு திட்டமிட்டபடி 'வலது'* பக்கத்திலிருந்து 'இடது' பகுதிக்கு விரிவடைந்துள்ளது. இது உங்கள் விருப்பத்தின்படி வரம்பில்லாமல் தொடரும்.
- நீடித்த தன்மையற்ற, அதிகவிலை-மோசமான தரம், காப்பியடித்தல் அல்லது ஒன்றுபோல இருத்தல், விரும்பத்தகாதவை (எங்கள் வாடிக்கையாளர்களுடன் ஆய்வு செய்யப்பட்டது), அல்லது ஷெல்ஃப்களில் இடத்தை வீணடிக்கும் பல பொருட்களை நாங்கள் அகற்றிவிட்டோம். மேலும் நீடித்த, ஆரோக்கியமான பொருட்களைத் தேர்வுச் செய்வதற்காக ஷெல்ஃப்களில் அவற்றை வைத்து உங்களுக்குக் காண்பிக்கிறோம்.
- நமது ஷெல்ஃப்பில் வைத்து விற்பதற்கு உரிய இலாபம் குறித்து பல சப்ளையர்கள் மற்றும் பிராண்டுகளுடன் நாங்கள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம், எல்'ஓரியல், கார்னியர் போன்றவை பல மாதங்களுக்குப் பிறகு இறுதியாக அதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டனர்.
- வளாகம் ஒரு விரிவான மறுசீரமைப்பு, காலதாமதமான பராமரிப்பு, புனரமைப்பு ஆகியவற்றுக்கு உட்பட்டுள்ளது, இதை நீங்கள் பாராட்டுவீர்கள் என நம்புகிறோம்.
- மின்சாரம், கணினி நெட்வொர்க், கணினிகள் ஆகியவை கட்டம் கட்டமாக சீரமைப்பு செய்யப்படும் திட்டத்தில் உள்ளன.
- சோலார் பேனல்கள் அக்டோபரில் இருந்து நமக்கு மின்சாரம் அளித்து வருகின்றன, ஆகஸ்டு முதல் நமது புதிய ஃப்ரிட்ஜ்கள் மற்றும் ஃப்ரீசர்களை ஒரு நிலைப்படுத்தி பாதுகாத்து வருகிறது (நம்முடைய சொந்த மூடிய ஆற்றல் திறன் கொண்ட ஃப்ரீசர்களை வாங்குவதும் கூடுதல் % இலாபம் பெறுவதும் அதிக மின்சாரத்தைப் பயன்படுத்தும் இலவசங்களைப் பெறுவதை விட அதிகமாக சேமிக்கிறது).
- நாங்கள் நிர்வகித்த ஒரு பெரிய நிதி சவாலை இங்கு பணிபுரியும் பெண்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

எதிர்பார்த்த இடங்களின் ஆதரவுடன் இன்னும் அதிகமாக சாதித்திருக்க முடியும், தனித்திருப்பது ஒரு சுயஆதரவாக இருந்தது...
ஆனால் எதிர்பாராத இடங்களில் இருந்து ஏராளமான ஆதரவு கிடைத்ததால் நாங்கள் மகிழ்ச்சியடைந்து ஆச்சரியப்பட்டோம்.

எங்கள் அடுத்த திட்டங்கள்:

1. எங்களின் பழைய இன்வென்ட் பில்லிங் சாஃப்ட்வேர் ஈஆர்பிநெக்ஸ்ட் அடிப்படையிலான சாஃப்ட்வேருக்குப் பதிலாக, வாங்குவதைத் தானியக்கமாக்கி, நீடித்த உற்பத்தி பொருட்களில் கவனம் செலுத்த எங்களுக்கு உதவுவதற்காக, நமது சமூகத்திற்கு வெகுமதி அளிக்கும் புரோகிராமை அனுமதித்தல்.
2. எங்கள் ஐடி அமைப்பு, மின்சார நெட்வொர்க், வளாகம் ஆகியவற்றை மேலும் புதுப்பித்து, நவீனப்படுத்துதல்.
3. அதிக மின்சாரத்தை நுகரும் உபகரணங்களை மாற்றுதல்/குறைத்தல்.
4. எங்கள் கேன்டீனில் ஆரோவில் சமூக உறுப்பினர்களுக்கு இன்னும் கூடுதலான உணவு வழங்குதல் மூலம் ஆரோவில்லில் மேலும் உணவு உற்பத்தியை அதிகரிப்பதை ஊக்குவித்தல்.
5. ஏவி டிராப்சி ஆப் மூலம் ஆன்லைன் ஷாப்பிங்கை (டெலிவரியும்) வழங்குதல்.
6. எங்கள் வளாகத்திற்கு ஒரு (சுய நிதியுதவி) நீர்ப்பிடிப்பு ஒன்றை உருவாக்குதல், மேலும் நமது ஆரோவில், பக்கத்து கிராமத்திற்கும் பயன்படும் ஒரு அக்வாபோனிக்ஸ், இலவச நீச்சல்குளம் உருவாக்குதல்.
7. ஒரு புதிய கேன்டீன் மற்றும் ஒரு சமூக பிளாசாவை உருவாக்குதல்.
8. நமது ஆரோவில் மண்டலப் பகுதியைச் சேர்ந்த 'உறவினர்-சகோதரர்கள் மற்றும் சகோதரிகள்' உடன், குறிப்பாக ஆரோவில்லில் பணிபுரிபவர்கள் மற்றும் பங்களிப்பவர்களுடன் இன்னும் அதிகமாக இணைந்திருத்தல்.

டிசம்பர் 2 சனிக்கிழமை அன்று எங்கள் கேண்டீனில் ஒரு சிறிய கொண்டாட்டத்தில் எங்களுடன் சேர உங்களை அழைக்கிறோம்
<u>ptps@auroville.org.in</u> மூலம் அல்லது அதற்கு முந்தைய நாள் வரை நேரில் பதிவுசெய்யும் அனைவருக்கும் **இலவச மதிய உணவு** உண்டு.

இந்த தலைப்புகளைப் பற்றி மேலும் அறிய விரும்புகிறீர்களா? ஒரு அமைதியான தருணத்தில் அல்லது அந்த கொண்டாட்டத்தில் சனிக்கிழமை குமரன் அல்லது ஜோயல் ஆகியோரை சந்திக்கத் தயங்க வேண்டாம் ;-)

---

## அறிவிப்புகள் (Announcements)

**மல்டி மீடியா சென்டர் அரங்கம் (எம்எம்சி, டவுன் ஹால்)**
(MULTI MEDIA CENTRE AUDITORIUM (MMC, Town Hall)

**நினைவூட்டல்: நவம்பர் 24 வெள்ளிக்கிழமை அன்று இரவு 8:00 மணிக்கு, "அனதர் வோர்ல்ட்" (ANOTHER WORLD)** (அசல் தலைப்பு: **Un autre monde.** *இயக்கம்:* **ஸ்டெஃபேன் பிரிஸே,** ஃபிரான்ஸ், 2021.

**டிசம்பர் 01, வெள்ளிக்கிழமை, இரவு 8.00 மணிக்கு**, **"ஹவ் டு ஸ்டீல் எ மில்லியன்" (THE CONVERSATION),** ***இயக்கம் –*** ஃபிரான்சிஸ் ஃபோர்டு கொப்போலா, யுஎஸ், 1974.
*நடிப்பு:* ஜீன் ஹேக்மேன், ஜான் கசலே, ஆலன் கார்பீல்ட், சிண்டி வில்லியம்ஸ், ஃபிரடெரிக் ஃபாரஸ்ட் ஹாரிசன் ஃபோர்டு, டெரி கார், ராபர்ட் டுவால்.
*இது ஒரு ஆங்கில மொழிப்படம், ஆங்கில துணை வாசகங்களுடன், காலம்: 1 மணிநேரம் 53 நிமிடம்.*

---




**கனவு தெய்வீகம் தொடர்** (Dream Divine Series)

குறிப்பாக புதிதாய்ச்சேர்ந்தவர்களுக்கு (நியூகம்மர்) வழிகாட்டுவதற்கு **கனவு தெய்வீகம் தொடர்** ('தி ட்ரீம் டிவைன் சீரிஸ்') என்ற திட்டத்தை சாவித்ரி பவன் அறிமுகப்படுத்தியுள்ளது. ஆரோவில்லின் நோக்கங்களையும் இலட்சியங்களையும் புதிதாய்ச்சேர்ந்தவர்கள் (நியூகம்மர்) புரிந்துகொள்வதும், ஸ்ரீ அரவிந்தர், ஸ்ரீ அன்னை ஆகியோரின் வாழ்க்கை மற்றும் படைப்புகள், பூரண யோகம் ஆகியன பற்றி அறிந்து கொள்வதும், இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். புதன்கிழமைதோறும் மாலை 4.30-5.30 மணிக்கு வாராந்திர அமர்வு நடைபெறும். இந்தத் தொடரில் விளக்கக்காட்சிகள், திரைப்படங்கள், உரைகள் போன்றவை அடங்கும், அதைத் தொடர்ந்து கேள்விகள், பதில்கள் அமர்வு.

**நவம்பர் 29 புதன்கிழமை மாலை 4.30 - 5.30 மணி வரை**
**ஆரோவில், பொன்னான பிணைப்பு – மனித ஒற்றுமையை நோக்கி......**
**பதிவு செய்யப்பட்ட காணொளி**
சாவித்திரி பவனில் உள்ள சங்கம் ஹால்
அனைவரும் வருக.

---

**24.11.1926 - ஸித்தி தினம் அல்லது வெற்றி தினம்**
(Siddhi Day or the Day of Victory)

*"The descent of Krishna would mean the descent of the Overmind Godhead preparing, though not itself actually bringing, the descent of Supermind and Ananda."*

**24-11-2023 வெள்ளிக்கிழமை காலை 6.30 - 7 மணி:**
மாத்ரிமந்திரின் ஆலமரத்தடியில் தியானம்.
அலுவலக கேட் வழியாக உள்ளே வரவும், காலை 6 மணி முதல் திறந்திருக்கும்.
விருந்தினர்கள் தங்கள் ஆரோகார்டை எடுத்து வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
**ஓம்.**

---

**சித்த மருத்துவ ஆலோசனை** (siddha consultation)

டாக்டர் சரவணன் அவர்கள், சித்த மருத்துவர், ஆரோவில் சுகாதார மையத்தில் நவம்பர் 1 முதல், புதன் & வெள்ளி தோறும் பிற்பகல் 3-5 மணி வரை ஆலோசனை வழங்க இருக்கிறார். இதற்கு முன்பதிவு அவசியம், தயவுசெய்து காலை 9-12 மணி அல்லது பிற்பகல் 6-8 மணிக்குள் 0413-2255450 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு முன்பதிவு செய்து கொள்ளவும்.
நன்றி, *அன்புடன், டாக்டர் உமா*

---

**ஸ்ரீ அரவிந்தரின் அறை தரிசனம்** (Room Darshan At the Sri Aurobindo Ashram)




அன்பார்ந்த சமூக உறுப்பினர்களுக்கு,
நவம்பர் 24, ஸித்தி தினம் அல்லது வெற்றி தினம் அன்று பொது தரிசனத்திற்காக ஸ்ரீஅரவிந்தரின் அறை காலை 5:00 மணி முதல் மதியம் 11 மணி வரை திறக்கப்படும் என்று ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம் அறிவித்துள்ளது.

டிசம்பர் 5, ஸ்ரீ அரவிந்தரின் மகாசமாதி தினத்தன்று பொது தரிசனத்திற்காக ஸ்ரீஅரவிந்தரின் அறை காலை 5:00 மணி முதல் மதியம் 10 மணி வரை திறக்கப்படும் என்று ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம் அறிவித்துள்ளது.

ஸ்ரீ அரவிந்தரின் அறை தரிசனம் அனைவருக்கும் கிடைக்கும். அறை தரிசனத்திற்கு டோக்கன்கள் தேவையில்லை. உங்கள் வசதிக்கேற்ப காலை 5 மணி முதல் பொது தரிசன வரிசையில் சேரலாம்.
அன்புடன், *ஆண்ட்ரியா*

---

## **14வது ஆரோவில் மராத்தான் அறிவிப்பு** (14th Auroville Marathon announcement)

அன்பார்ந்த ஆரோவில் மராத்தான் பங்கேற்பாளர்களுக்கு,
ஆரோவில் மராத்தான் **2024 பிப்ரவரி 18 ஞாயிற்றுக்கிழமை** (2024 பிப்ரவரி 3வது ஞாயிறு) நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஆன்லைன் பதிவு, 2023 நவம்பர் 15 அன்று மதியம் தொடங்கும். இந்த ஆரோவில் மராத்தான் பதிப்பில் சேர நீங்கள் திட்டமிட்டால், பின்வரும் இணைப்பின் மூலம் பதிவுசெய்ய உங்களை அழைக்கிறோம்: https://www.aurovillemarathon.com/. 2023 நவம்பர் 15 அன்று மதியம் முதல் 2023 டிசம்பர் 31 மதியம் வரை பதிவு திறந்திருக்கும் என்பதை நினைவில் கொள்ளவும்.

ஆரோவில் மற்றும் ஆரோவில்லைச் சுற்றியுள்ள ஊர்களைச் சேர்ந்த தனிப்பட்ட ரன்னர்கள் மற்றும் ரன்னர்ஸ் டீம் அமைப்பாளர்கள் (ஆரோவில்லில் இருந்து 6 கிமீ சுற்றளவில் வசிப்பவர்கள்), இந்த காலகட்டத்தில், சாராகானில் இருந்து திங்கள் முதல் வெள்ளி வரை, காலை 11 மணிமுதல் மாலை 4 மணிக்குள் கூப்பன்களை வாங்கிக் கொள்ளலாம் அல்லது marathon@auroville.org.in என்ற மின்னஞ்சலுக்கு எழுதிக்கேட்டு கூப்பனை பெறலாம். கூப்பனைப் பெற்ற பிறகு, உங்கள் ஆன்லைன் பதிவைத் தொடரவும்.

**அனைத்து பங்கேற்பாளர்களும் பாதுகாப்பான மற்றும் காயம் எதுவும் ஏற்படாதவாறு ஓடுவதை உறுதிசெய்வதற்கு ஏற்பாட்டுக் குழு ஏற்பாடு செய்துள்ளது**. இந்த மராத்தான் ஓட்டத்திற்கான விரிவான பயிற்சியை மேற்கொள்ளுமாறு நாங்கள் மிகவும் ஊக்குவிக்கிறோம். ஆரோவில்லில் நீங்கள் ஒரு மிகச்சிறப்பான அனுபவத்தைப் பெற விரும்புகிறோம்.

அன்பான வாழ்த்துக்கள், *ஆரோவில் மராத்தான் அணி*

---

## **நுழைவுச் சேவையின் அறிவிப்பு, ES#207, தேதி: 23-11-2023**

நமது சமூகத்தில் சேர பின்வரும் நபர்கள் நுழைவு வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். சாத்தியமான புதிதாய்ச்சேர்ந்தவர்கள், ஆரோவில்லின் கூட்டாளிகள், நண்பர்கள் பற்றிய உங்கள் கருத்துக்களை 2 வாரத்திற்குள் பகிர்ந்து கொள்ளவும். சாத்தியமான ஆரோவில்வாசிகள், திரும்பிவரும் ஆரோவில்வாசிகள், இளைஞர்கள், ஒரு ஆரோவில்வாசியின் துணைவர்/பார்ட்னர் ஆகியோர் பற்றிய கருத்துக்களை 4 வாரத்திற்குள்ளும் auroville.entryboard@gmail.com அல்லது auroville.entryservice@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு எழுதவும். உங்களது கருத்துகளுக்கு முன்கூட்டியே நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

**புதிதாய்ச்சேர்ந்தோராக அறிவிக்கப்படுகிறது:**
**தீபானி ராதாகிருஷ்ணா** (இந்தியா) – ஆரோமாடலில் (பத்மநாபன் வீடு) தங்கியுள்ளார், மாத்ரிமந்திர் & பிடிபிஎஸ்யில் பணிபுரிகிறார்.
**ஓல்கா மெர்சன்டே** (ஸ்பெயின்) – எம்டிஜேவில் (மிசுன் தே ஜெல்) தங்கியுள்ளார், ஃபுட் லிங்க் & லாஸ்ட் ஸ்கூலில் பணிபுரிகிறார்.
**பிரபு கஜேந்திரன் (இரகு)** (இந்தியா) – டெர்ரா சோலில் தங்கியுள்ளார், சுதா கிச்சன் & டெர்ரா சோலில் பணிபுரிகிறார்.
**விஷ்ணு ரெட்டி** (தென் ஆப்பிரிக்கா) – ஸ்ரீ மாவில் தங்கியுள்ளார், டேன்டோவில் (புதியது) பணிபுரிகிறார்.

**புதிதாய்ச்சேர்ந்தோரின் குழந்தைகள்:**
**பிரியதர்ஷன்** (இந்தியா), **கீர்த்திக்** (இந்தியா) - (இவர்கள் தீபானியின் மகன்கள் ஆவர்)

**புதிதாய்ச்சேர்ந்தோராக உறுதிசெய்யப்படுகிறது:**
**அருண் பிரகாஷ் அம்பதி** (இந்தியா), **அமுதா லட்சுமி வேல்முருகன்** (இந்தியா), **அன்பழகன் கண்ணையன் (அன்பு)** (இந்தியா), **நிஹாரிகா சன்யால்** (இந்தியா)

**ஆரோவில்வாசியாக அறிவிக்கப்படுகிறது:**
**கணபதி கணேசன்** (இந்தியா) – பிரயாத்தனாவில் தங்கியுள்ளார், மந்த்ரா பாட்டரியில் பணிபுரிகிறார்.

**ஆரோவில்வாசியாக உறுதிசெய்யப்படுகிறது:**
**அஞ்சனா சரஃப்** (இந்தியா), **கவியரசு தேவராசு** (இந்தியா)

**ஆரோவில்லிற்கு திரும்பிவந்துள்ள ஆரோவில்வாசியாக அறிவிக்கப்படுகிறது:**
**சாண்ட்ரா ஜேன் ஜேக்கப்ஸ் (நாரதி)** (அமெரிக்கா) – ஆரத்தி – 1இல் தங்கியுள்ளார், சோலார் கிச்சனில் பணிபுரிகிறார்.

**18 வயதை அடைந்துள்ள ஆரோவில் இளைஞர்கள்:**
**இளங்கோ பியன் போர்க்** (பிரான்சு), **நற்செல்வி சரவணன்** (இந்தியா)

**ஆரோவில்வாசியின் துணைவியார் நிலை உறுதிசெய்யப்படுகிறது:** **ஈஸ்வரி மதன்** (இந்தியா)

**ஆரோவில்லில் சேர இன்னும் தயாராகாதவர்கள்:** நுழைவு வாரியம், சம்பந்தப்பட்ட வழிகாட்டுநர்களை கலந்தாலோசித்து, பின்வரும் புதிதாய்ச்சேர்ந்தோரை ஆரோவில்லில் சேருவதற்கு ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கான காரணம் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. **இந்திரா இராமலிங்கம்** (இந்தியா).

**குறிப்பு:** நீங்கள் செயல்முறையில் உள்ள ஒருவரைப் பற்றி மேலும் அறிய விரும்பினால், மேலும் விவரங்களுக்கு நுழைவுச் சேவைக்கு நேரில் வரவும்.
தங்களின் நுழைவு வாரியம், (அலென், கிரேஸ், ஜெயந்தி, இலட்சுமணன், மடில்ட், சாரா, சோனியா, ஸ்வாதா)
நுழைவுச் சேவை திறந்திருக்கும் நேரம்: திங்கள், புதன், வெள்ளி - காலை 9:30 - 12:30 மணி வரை / செவ்வாய் & வியாழன் – பிற்பகல் - 2:30 - 4:30 மணி வரை – புதிதாய்ச்சேர்ந்தோர் கிட் வழங்கப்படும்.
தொலைபேசி எண்: (0413) 262-2707 மின்னஞ்சல் முகவரி : auroville.entryservice@gmail.com

---